ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

सत्यमेव जयते

பாண்டிச்சேரி

தேதி : 13.12.2024

வாழ்த்து மடல்

கல்விச் சேவையில் நாற்பது ஆண்டுகளை நிறைவு செய்யும் அமலோற்பவம் மேல்நிலைப் பள்ளிக்கு என் இதயங்கனிந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாபெரும் வளர்ச்சிக்கு முதற்காரணமாக அன்று முதல் இன்று வரை அயராது உழைத்துவரும் சகோதரர் திரு.ச.அ. லூர்துசாமி அவர்களை மனதார பாராட்டுகிறேன்.

அன்னையின்றி ஏது வெற்றி!! அன்னையிருக்க என்றும் வெற்றி!! என்ற அவரது இறைப் பக்திதான் இத்தனை உயரத்தை அடையச் செய்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எத்தனையோ அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இருந்த சூழலில் புதிதாய் ஒரு பள்ளியைத் தொடங்கி, கல்வியில் பின்தங்கிய மாணவர்களையும் வாழ்வில் உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்ற ஒற்றை லட்சியத்தோடு வாழ்ந்தவர்தான் இப்பள்ளியின் நிறுவனர் மற்றும் முதுநிலை முதல்வர் அவர்கள். கல்வியை ஒழுக்கத்தின் வழியாக மாணவர்களிடம் கொண்டு செல்ல அடிப்படையாக, இறைபக்தியை மாணவப் பருவத்தில் விதைத்து வருபவர். இறைநம்பிக்கையோடு செய்யும் எந்த செயலும் வெற்றியில் முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து வருபவர் தாளாளர் திரு. ச.அ.லூர்துசாமி அவர்கள்.

பெற்றோர் பலரும் தங்கள் பிள்ளைகளை இந்தப் பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க விரும்புகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று அவர்களிடம் கேட்டபோது, “இங்குதான் ஒழுக்கமும் படிப்பும் முழுமையாகப் பெறுவார்கள்; இங்கே சேர்த்து விட்டால் சிறந்த மதிப்பெண்களோடு தேர்ச்சி பெற்று, உயர்கல்வியில் எளிதாக சேரமுடியும்; வாழ்வில் நல்ல நிலைக்குப் போகமுடியும்; ஏழை எளிய மக்களின் பிள்ளைகளும் சரளமாக ஆங்கிலத்தில் பேச முடியும்” என்று கூறுகிறார்கள்.

உண்மைதான். ஒவ்வொரு ஆண்டும் பொதுத் தேர்வில் பெற்ற வெற்றிகளை ஆராய்ந்து பார்த்தால், பெற்றோர் எதை எதிர்பார்த்தார்களோ அதைப் பூர்த்தி செய்து, வெறும் 35 மதிப்பெண்கள் எடுப்பவர்களைக் கூட 80 சதவீத மதிப்பெண்கள் எடுக்க வைத்து, மேற்படிப்புக்கு எளிதாக சேர வழியமைத்துக் கொடுப்பது இந்தப் பள்ளி என்பதைப் பலமுறை பார்த்திருக்கிறேன்.

✆ அலு. : 2333399, 2335530, 2335328, 2335522 தொலை நகலி : 0413 - 2333135
இல்லம் : 2271232

ந. ரங்கசாமி
முதலமைச்சர்
புதுச்சேரி அரசு

பாண்டிச்சேரி

தேதி :

புதுச்சேரியில் படிப்பறிவுக்கு வாய்ப்புகள் அதிகம். அவ்வகையில் நம் மாநிலத்தை நூறு சதவீத கல்வியறிவு பெற்ற மாநிலமாக்கிட அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்குப் பக்கபலமாக அமலோற்பவம் பள்ளி இருந்து வருகிறது. புதுவையின் கல்வித் தேவையை நிறைவேற்றுவதில் இப்பள்ளி பெரும்பங்காற்றி வருகிறது. அதை நினைத்து பெருமிதம் அடைகிறேன். உலகின் சிறந்த செல்வத்தை நிறைவாக கொடுத்துவரும் இப்பள்ளிக்கு அரசின் சார்பாக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமின்றி இந்தப் பள்ளியில் தங்கள் பிள்ளைகளைச் சேர்த்த பிறகு பெற்றோர் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பாதுகாப்பாக இருக்க முடியும். காரணம் என்னவென்றால், அந்தக் குழந்தைகளுக்கு படிப்பு மட்டுமல்லாமல், உடல் நலம் குன்றினால் உரிய செவிலியர்களைக் கொண்டு குணமளித்து, பெற்றோருக்கு சுமை தராமல், தாமே ஒரு தாயாக-தந்தையாக இருந்து, வளர்த்து ஆளாக்கி அழகு பார்க்கும் அக்கறை மிகுந்த ஒரு முதல்வரைப் பெற்றிருப்பது இப்பள்ளி. அந்த ஒப்பற்ற சேவையால் இன்று பத்தாயிரம் மாணவர்களுடன் வீறுநடை போடுகிறது.

இந்த இனிய தருணத்தில் கல்வியோடு சேர்த்து விளையாட்டையும் சிறந்த முறையில் வழங்கிட, இந்நிறுவனத்தால் புதிதாக நிறுவப்பட்டுள்ள **“AMALORPAVAM SCHOOL OF SPORTS”.** என்னும் பள்ளியை ஆரம்பித்து வைப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். இப்பள்ளி இந்த முயற்சியிலும் பெருவெற்றி பெற்று, பல்லாண்டு காலம் கல்விச்சேவையில் தழைத்து வளர புதுவை மக்களின் சார்பில் மனதார வாழ்த்துகிறேன்.

(ந. ரங்கசாமி)

அலு. : 2333399, 2335530, 2335328, 2335522 தொலை நகலி : 0413 - 2333135
இல்லம் : 2271232